**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC .**No. 86/2026**

**2026 – ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் தேதி புதன்கிழமை அ.சா. 2– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

**அ.சா.** : 2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | : **நீலகண்டன்** | **தொழில்** | : **எமர்ஜென்சிமெடிக்கல் டெக்னிசியன்** |
| **த/பெ.** | : **கந்தசாமி** | **வட்டம்** | : உடையார்பாளையம் |
| **கிராமம்** | : உடையார்பாளையம் | **வயது** | : 44 |

<u>**05.08.2026**</u>

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது உடையார்பாளையத்தில் வசித்து வருகிறேன். நான் எமர்ஜென்சிமெடிக்கல் டெக்னிசியனாக வேலை செய்து வருகிறேன். 02.10.2025 அன்று அதிகாலை சுமார் 03.00 மணிக்கு கேஸ் அட்மிசன் போட்டுவிட்டு TN–20 G3366 என்ற பதிவு எண் கொண்ட 108 ஆம்புலன்சில் நான் முன் இருக்கயைில் அமர்ந்திருந்தபோது ஆம்புலன்சை கந்தபழனிவேல் என்பவர் ஓட்டினார். செந்துறை ரவுண்டானா அருகே உள்ள கோவிலுக்கு அருகில் சென்றபோது வேகதடை தாண்டி 30 கி.மீ வேகத்தில் வந்துகொண்டிருந்தபோது ஒரு பாட்டி சாலையின் குறுக்கே வந்தார். அப்போது ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஆரன் அடித்தார், லைட்டையும் டிம் செய்து காட்டினார். பாட்டி நிற்காமல் வந்துவிட்டார். அந்த பாட்டியை எங்கள் ஆம்புலன்சில்

ஏற்றி அரியலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கின் எதிரி கந்தபழனிவேல் என்னுடன் எவ்வளவு நாட்களாக வேலை செய்கிறார் என்றால் சுமார் 6 மாதங்களாக வேலை செய்கிறார். கந்தபழனிவேல் எனக்கு நண்பரா என்றால் இல்லை. உடன் வேலை செய்பவர். அதிகாலை 02.00 மணிக்கு செந்துறை ரவுண்டானா அருகே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஆம்புலன்ஸ் வாகனத்தை எதிரி கவனக்குறைவாக ஓட்டிவந்தார் என்றால் இல்லை. அன்றைய தினம் எனக்கும் எதிரிக்கும் பணி நேரம் என்னவென்றால் முதல் நாள் காலை 08. 00 மணியிலிருந்து மறுநாள் காலை 08.00 மணிவரை. முதல் நாள் காலை 08.00 மணியலிருந்து எத்தனை கேஸ் பார்த்தோம் என்றால் 3 கேஸ் பார்த்தோம். முதல் நாள் காலை 08.00 மணியலிருந்து நான் ஆஜர் எதிரியுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். முதல் நாள் காலை 08.00 மணியலிருந்து வாகனத்தை ஓட்டியதால் எதிரி சம்பவத்தின் போது தூக்க கலக்கத்தில் இருந்தார் என்றால் மதியம் 12.00 மணியிலிருந்து 01.30 மணி வரை அவர் ஓய்வு எடுத்துக்கொண்டார். அந்த ஓய்வு நேரம் என்பது எங்களுக்கு வழங்கப்பட்ட ஓய்வு நேரமா என்றால் இல்லை கேஸ் இல்லை என்றால் ஓய்வு எடுத்துக்கொள்வோம். எதிரி தூக்க கலக்கத்தில் வாகனத்தை கவனக்குறைவாக ஓட்டி அடையாளம் தெரியாத பாட்டி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றாலும் நான் எதிரியுடன் ஒன்றாக பணிபுரிவதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பணி அரசு பணியா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் முதல் விசாரணையில் கூறியதைதான் கூறினேன் என்றால் சரிதான்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் அளித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**<u>மறு விசாரணை</u>**

_இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, அரியலூர்**

CC **.No. 86/2026**

**2026 – ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் தேதி புதன்கிழமை அ.சா. 3– வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் படி) திரு. N.ராஜா M.C. அவர்களால் உறுதி மொழி செய்விக்கப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அ.சா.** | : | 3 | | | |
| **பெயர்** | : | **பழனியாண்டி** | **தொழில்** | : | **சுய தொழில்** |
| **த/பெ.** | : | **பெரியசாமி** | **வட்டம்** | : | பெங்களூர் |
| **கிராமம்** | : | பெங்களூர் | **வயது** | : | 52 |

**05.08.2026**

**(எதிரி ஆஜர் இல்லை எதிரி தரப்பில் BNSS பிரிவு 355–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது )**

**முதல் விசாரணை**

நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். நான் சுய தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன சின்னப்பிள்ளை என் அம்மா. 02.10.2025 அன்று நான் பெங்களூரில் இருந்தபோது எனக்கு ஒரு போன் வந்தது. ஒரு பாட்டிக்கு விபத்து ஏற்பட்டுள்ளது அவருடைய பையில் இந்த நம்பர் இருந்தது என்று சொன்னார்கள். அவர் உங்கள் அம்மாவா என்ற கேட்டார்கள். ஆமாம் என்று சொல்லி உடனே தஞ்சாவூருக்கு வந்து என் அம்மாவை பார்த்தேன். என் அம்மாவுக்கு தலை, முகம் ஆகிய இடங்களில் அடிப்பட்டிருந்தது. கந்தபழனிவேல் என்கிற ஆம்புலன்ஸ் டிரைவர் என்னிடம் தன் வண்டியில் தான் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கருப்புசாமி கோவில் அருகே செல்லும்போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னார். 06.10.2025 அன்று சிகிச்சை பலனின்றி என் அம்மா இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

பசுபதி என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எங்கள் பெற்றோருக்கு நாங்கள் இருவர் மட்டும்தான் பிள்ளைகள் என்றால் சரிதான். நான் பெங்களூரில் எத்தனை வருடங்களாக இருக்கிறேன் என்றால் 28 வருடங்களாக இருக்கிறேன். என் அண்ணன் பசுபதி செந்துறையில் குடியிருக்கிறார் என்றால் சரிதான். என் அம்மாவுக்கு என்ன வயது இருக்கும் என்றால் சுமார் 70 வயது இருக்கும். என் அப்பா என் அம்மாவுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் என் அம்மா இறப்பதற்கு 5 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் தஞ்சாவூர் மருத்துவமனையில் வைத்து ஒரு முறை விசாரித்தார்கள். அப்போது கந்தபழனிவேல் தான் விபத்து பற்றி கூறினார் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்க அம்மா யாருடைய பாதுகாப்பில் எங்கு வசித்தார் என்றால் என் அண்ணன் பாதுகாப்பில் செந்துறையில் வசித்தார். செந்துறையில் இருந்த என் அம்மா சம்பவ இடத்திற்கு ஏன் நடந்து வந்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நானும் என் அண்ணனும் என் அம்மாவை சரியாக பார்த்துக்கொள்ளவில்லை என்றாலும் அவர் பசியில் சரியாக காது கேட்காமல் நடந்து சென்றதால் தடுமாறி விழுந்து விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) திருமதி.R.சங்கீதா சேகர்,
நீதித்துறை நடுவர் எண்–I,
அரியலூர்.